சென்னை ஜூலை, 19: வைத்திய சாலைகளுக்கு ரூ 3,33,80000/- மான்யம் கோரி மக்கள் சுகாதார மந்திரி ஏ.பி. ஷெட்டியார்: அவர் கூறியது: 1946ல் ஆஸ்பத்திரிகளில் 14467 படுக்கைகள் இருந்தன. அது 1951ல் 21,269 ஆக அதிகரித்திருக்கிறது. திட்ட வருஷத்தில் மேலும் 636 படுக்கைகளை சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. திட்ட வருஷத்தில் கட்டட வேலைக்கு ரூ 111/- லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஸ்டான்லி வைத்திய கல்லூரியின் அந்தஸ்தை உயர்த்தவும், மதுரையில் ஒரு வைத்தியக் கல்லூரியை அமைக்கவும் சர்க்கார் அனுமதித்திருக்கிறது. இதற்கு திட்டப்படி [illegible] ஒதுக்கப்பட்டிருக்கிறது. மதுரை திட்டத்திற்கு ரூ 118 லட்சமும், ஸ்டான்லி திட்டத்திற்கு ரூ 239 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக் கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் 100 மாணவர்கள் பயிற்சி பெறலாம். ஸ்பெஷல் பயிற்சி ஸ்தாபனங்கள் 29 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. திட்ட வருஷத்தில் 26 பெண் டாக்டர்களை நியமிக்க அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. உதவி சர்ஜன்களாக இருந்த 4 ஸ்திரீகள் இந்த ராஜ்யத்தில் முதன்முறையாக ஜில்லா வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வருஷம் மூன்று தாலுக்கா தலைமை ஆஸ்பத்திரிகளைத் தான் சர்க்கார் மேற்கொள்ளும். ஸ்தல ஸ்தாபனங்களின் ஆஸ்பத்திரிகளை விஸ்தரிப்பதற்கும், அபிவிருத்திக்காக இவ்வருஷம் ரூ 47,100/- ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை சம்பந்தமாக ரூ 100,200 வரை சர்க்கார் ஊழியர்கள் பொறுப்பு ஏற்க வேண்டியதாகும். ராஜ்யத்தில் கிராமங்களில் 526 இந்திய வைத்திய டிஸ்பென்சரிகளும் 316 நவீன வைத்திய டிஸ்பென்சரிகளும் உள்ளன. டாக்டர் பற்றாக்குறை காரணமாக 91 டிஸ்பென்சரிகள் மூடி கிடக்கின்றன. குஷ்டரோக நிவாரண வேலை செய்ய ஆரம்பித்தாயிற்று. மதுரை, ராமநாதபுரம், மலபார், தென்கன்னடம் ஆகியவற்றில் [illegible] திட்டமிடப்பட்டுள்ளன. [illegible] 1949 சர்க்கார் ஒரு உதவி அளித்து வருகிறது. புற்று நோய் சிகிச்சைக்காக சென்னை அடையார் ஆஸ்பத்திரியில் 98 படுக்கைகள் உள்ளன. எழும்பூர் [illegible] ஆஸ்பத்திரியில் புற்றுநோயாளிக்கு மேலும் 68 படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எல்.ஐ.எம். பயிற்சிக்கு மாணவர்களை அனுமதிப்பது இவ்வருஷத்துடன் நிறுத்தப்பட்டிருக்கிறது. எம்.பி.பி.எஸ். பயிற்சிக்கு மெடிக்கல் கல்லூரியில் 100 மாணவர்களை அனுமதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கிண்டி, அதனுடன் சேர்ந்த ஆஸ்பத்திரி ஆகியவற்றின் கட்டட அபிவிருத்திக்காக ரூ 25/- லட்சம் செலவிட சர்க்கார் அனுமதித்து வேலையும் நடந்து வருகிறது. * தினமணி 20.7.52 *

தமிழ் வெல்ல உற்பத்தி அதிகரிப்பு: புது தில்லி ஜூலை 18:

இந்தியாவின் [illegible] இவ்வருடம் வெல்ல உற்பத்தி [illegible] (279000 டன்) அதிகரித்துள்ளது. சென்ற வருடம் 5616000 டன்களும், இவ்வருடம் 58,95,000 டன்கள் வெல்லம் உற்பத்தி. இந்த வருஷம் கரும்பு பயிராகும் நிலப்பரப்பு [illegible] (513000 ஏக்கர்) அதிகமாகும். இவ்வருடம் கரும்பு சாகுபடியானது. இவ்வருடம் 4727000 ஏக்கரும், சென்ற வருஷம் 4214000 ஏக்கர் சாகுபடியானது. (இந்திய உணவு — விவசாய அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையிலிருந்து எடுத்தது) தினமணி (20.7.52)

சென்னை ராஜ்யத்தில் மொத்த ஜனத்தொகையில் [illegible] 10 லட்சத்து 40 லட்சம் [illegible] இருக்கின்றனர்: சென்னை ராஜ்ய தேர்தல் செலவு ரூ 84/- லட்சம் செலவாயிற்று என்றும், [illegible] சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் என்றும் தெரிகிறது. புதுடில்லி 18: [illegible] 2462000 டாலர் ஒதுக்கியதாக [illegible] அறிவித்திருக்கிறது.

சென்னை ஜூலை 19: நேற்று காலையில் [illegible] 30 லாரிகளில் நெல்லும், அரிசியும் சென்னைக்கு வந்தது. [illegible] போட்டா போட்டியாக வந்திருந்த [illegible]. ஆகவே, சென்னையிலும் [illegible] கொண்ட பேட்டை 1க்கு [illegible] ரூ 46/47 ஆக இறங்கிவிட்டது. பட்டணம் படி 1க்கு [illegible] ரூ 1-1-0 லிருந்து ரூ 1-2-0 வரையில் [illegible]. பட்டணம் படி 1க்கு ரூ 1-0-6 லிருந்து ரூ 1-1-0 வரையில் [illegible]. சென்ற வாரத்தில் பம்பாய்க்கு சென்னையிலிருந்து சுமார் 2000 டன்கள் "உணவு தானியம்" [illegible] அனுப்பப்பட்டது. [illegible] இவ்வாரத்தில் சுமார் 3000 டன் சென்னையிலிருந்து பம்பாய்க்கு அனுப்பப்பட்டது.

* தினமணி 20.7.52 *

வைத்திய மான்ய கோரிக்கை சென்னை ஜூலை 21: மந்திரி கூறியது: [illegible] ஆஸ்பத்திரி வசதிகள் போதுமானதாயில்லை. [illegible] கிராமங்களில் போதிய வைத்திய சாலைகள் இல்லை. ரூ 239 லட்சம் செலவில் மதுரையிலும் ஸ்டான்லியிலும் மெடிக்கல் காலேஜுகளை ஆரம்பிக்கும் திட்டத்திற்கு சர்க்கார் சம்மதித்து [illegible] ஏற்பாடு செய்தது. கடந்த [illegible] வருஷங்களில் ஆஸ்பத்திரிகளில் 7000 படுக்கைகள் தான் அதிகரித்துள்ளன. 140 தாலுக்கா தலைமை ஸ்தல ஆஸ்பத்திரிகளை மாகாண சர்க்கார் ஏற்க முன்வரும். இன்னும் 62 ஆஸ்பத்திரிகளை மாகாண சர்க்கார் ஏற்க வேண்டும். ஆஸ்பத்திரிகளுக்கு தேவை

(மறுபக்கம்)